தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 6.

ந.க.எண். 001929 / கே2 / 2024, நாள். 02.03.2024

…………………

பொருள்: தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை – 6– எண்ணும் எழுத்தும் திட்டம் – 2023 –2024 ஆம் கல்வியாண்டு – 1 முதல் 5ஆம் வகுப்பு – மூன்றாம் பருவத்திற்கான குறுவள மைய இணைய வழி பயிற்சியில் ஆசிரியர்களை பங்கேற்க தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை எண் 147, பள்ளிக் கல்வித் (ERT) துறை நாள். 22.10.2021
2. அரசாணை எண் 129, பள்ளிக் கல்வித் (ERT) துறை, நாள் 18.07.2023
3. அரசாணை (ப)எண் 46.,பள்ளிக் கல்வித் (ERT) துறை நாள் 05.02.2024

…………………

பார்வை (3)இல் காணும் அரசாணையை செயல்படுத்துதல் பொருட்டு, எண்ணும் எழுத்தும் திட்டம் சார்ந்து 1 முதல் 5ஆம் வகுப்பிற்குரிய மூன்றாம் பருவத்திற்கான குறுவள மைய இணையவழியான பயிற்சி Tamilnadu Teachers Platform (TNTP) tntp.tnschools.gov.in/ login என்ற இணையதளத்தில் பாடவாரியான கீழ்க்காணும் பயிற்சி கட்டகங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

1 முதல் 3ஆம் வகுப்பு

| வ. எண் | பாடம் | காணொலிகளின் நேரம் |
|---|---|---|
| 1. | எண்ணும் எழுத்தும் வெற்றியாளர் காணொலி | 7.58 நிமிடங்கள் |
| 2. | மூன்றாம் பருவம் தமிழ் பாடத்திற்கான விளக்கக் காணொலி | 19.30 நிமிடங்கள் |
| 3. | மூன்றாம் பருவம் ஆங்கிலம் பாடத்திற்கான விளக்கக் காணொலி | 16.00 நிமிடங்கள் |
| 4. | மூன்றாம் பருவம் கணிதம் பாடத்திற்கான விளக்கக் காணொலி | 18.59 நிமிடங்கள் |

4 மற்றும் 5ஆம் வகுப்பு

| வ. எண் | பாடம் | காணொலிகளின் நேரம் |
|---|---|---|
| 1. | பயிற்சிக்கான அறிமுக காணொலி | 1.27 நிமிடங்கள் |
| 2. | மூன்றாம் பருவம் தமிழ் பாடத்திற்கான விளக்கக் காணொலி | 15.51 நிமிடங்கள் |
| 3. | மூன்றாம் பருவம் ஆங்கிலம் பாடத்திற்கான விளக்கக் காணொலி | 10.08 நிமிடங்கள் |
| 4. | மூன்றாம் பருவம் கணிதம் பாடத்திற்கான விளக்கக் காணொலி | 15.44 நிமிடங்கள் |
| 5. | மூன்றாம் பருவம் அறிவியல் பாடத்திற்கான விளக்கக் காணொலி | 7.46 நிமிடங்கள் |
| 6. | மூன்றாம் பருவம் சமூக அறிவியல் பாடத்திற்கான விளக்கக் காணொலி | 10.55 நிமிடங்கள் |

1 முதல் 3ஆம் வகுப்பு கற்பிக்கும் அனைத்துப் பள்ளி ஆசிரியர்களும் இப்பயிற்சியினை 05.03.2024 முதல் 13.03.2024 முடிய இணைய வழியில் எடுத்துக் கொள்ளும் வகையில் பயிற்சிக்கான கட்டகங்கள் ஆசிரியர்களின் பார்வைக்கு இருக்கும். ஆசிரியர்கள் இப்பயிற்சியினை மேற்குறிப்பிட்ட தேதிக்குள் ஒன்று அல்லது இரண்டு நாட்களில் எடுத்து முடித்த பின்பு பயிற்சி மதிப்பீட்டினை (Training Assessment) மேற்கொள்ள வேண்டும்.

மேலும், 4 மற்றும் 5ஆம் வகுப்பு கற்பிக்கும் அனைத்து பள்ளி ஆசிரியர்களும் இப்பயிற்சியினை 06.03.2024 முதல் 14.03.2024 முடிய இணைய வழியில் மேற்கொள்ளும் வகையில் பயிற்சிக்கான கட்டகங்கள் ஆசிரியர்களின் பார்வைக்கு இருக்கும். ஆசிரியர்கள் இப்பயிற்சியினை மேற்குறிப்பிட்ட தேதிக்குள் ஒன்று அல்லது இரண்டு நாட்களில் எடுத்து முடித்த பின்பு பயிற்சி மதிப்பீட்டினை (Training Assessment) மேற்கொள்ள வேண்டும்.

மேற்கண்ட இப்பயிற்சியினை 1 மற்றும் 5ஆம் வகுப்பு வரை கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களும் மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது

தொடக்கக் கல்வி இயக்குநர்

பெறுநர்
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி)
நகல் – மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை – 6
தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை – 6
முதன்மைக் கல்வி அலுவலர்கள், அனைத்து மாவட்டங்கள்